# வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) மறுவிற்பனைச் சந்தையை மந்தமடையச் செய்வது, மற்றும், முதல்முறை வீடு வாங்குபவர்களுக்கு அதிக ஆதரவு அளிப்பதற்கான நடவடிக்கைகள்

## இந்தப் புதிய நடவடிக்கைகளின் தொகுப்பானது:



- வீடமைப்பு வளர்ச்சிக் கழக (வீவக) வீட்டை வாங்க விவேகமாகக் கடன் வாங்குவதை ஊக்குவிக்கும்
- மறுவிற்பனைச் சந்தையை மேலும் நிலைப்படுத்தும்
- குறைந்த வருமானம் முதல் நடுத்தர வருமானம் ஈட்டும் முதல்முறை வீடு வாங்குபவர்களுக்குக் கட்டுப்படியாகும் தன்மையை அதிகரிக்கும்



## புதிது வீவக வீட்டுக் கடன்களுக்குக் குறைவான கடன்-தொகை விகித (Loan-to-Value, LTV) வரம்பு

- 20 ஆகஸ்டு 2024 முதல் 80% -இல் 75% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது
- வீவக கடனைப் பெறும் பெரும்பாலான வீடு வாங்குபவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.
- அதிக LTV விகிதங்களில் கடன் பெறுபவர்கள் அதிக விலைகளில் பெரிய வீடுகளை வாங்க முனைகின்றனர். குறைந்த LTV வரம்பானது அதிக நிதி சார்ந்த விவேகத்தை ஊக்குவிக்கும், மேலும் அதிக விலையுள்ள மறுவிற்பனை வீடுகளுக்கான தேவையைக் குறைக்கும்.



## புதிது மேம்படுத்தப்பட்ட மத்திய சேமநிதி வீட்டு மானியம் (EHG) அதிகரிப்பு

- குறைந்த வருமானம் முதல் நடுத்தர வருமானம் ஈட்டும் முதல்முறை வீடு வாங்குபவர்களுக்குக் கட்டுப்படியாகும் தன்மையை அதிகரிக்கிறது.
- மறுவிற்பனை விலைகளை உயர்த்தாமல், அதிக ஆதரவு தேவைப்படும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு அதிக கடன் தொகைகள்.



### முதல்முறை வீடு வாங்கும் குடும்பங்களுக்கான வீட்டு மானியங்கள்

| மானியம் | முன்பு | திருத்தியமைக்கப்பட்டது |
|---|---|---|
| (A) EHG | $80,000 வரை | $120,000 வரை ▲ |
| (B) மசேநிதி வீட்டு மானியம் | $80,000 வரை | மாற்றமில்லை |
| (C) நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் | $30,000 வரை | மாற்றமில்லை |
| புதிய வீடுகளுக்கான மொத்த மானியங்கள் (A) | $80,000 வரை | $120,000 வரை ▲ |
| மறுவிற்பனை வீடுகளுக்கான மொத்த மானியங்கள் (A + B + C) | $190,000 வரை | $230,000 வரை ▲ |

### முதல்முறை வீடு வாங்கும் ஒற்றையர்களுக்கான வீட்டு மானியங்கள்

| மானியம் | முன்பு | திருத்தியமைக்கப்பட்டது |
|---|---|---|
| (D) EHG | $40,000 வரை | $60,000 வரை ▲ |
| (E) மசேநிதி வீட்டு மானியம் | $40,000 வரை | மாற்றமில்லை |
| (F) நெருக்கம் ஊக்குவிக்கும் வீட்டு மானியம் | $15,000 வரை | மாற்றமில்லை |
| புதிய வீடுகளுக்கான மொத்த மானியங்கள் (D) | $40,000 வரை | $60,000 வரை ▲ |
| மறுவிற்பனை வீடுகளுக்கான மொத்த மானியங்கள் (D + E + F) | $95,000 வரை | $115,000 வரை ▲ |

## இந்த நடவடிக்கைகள் இவற்றுக்குப் பொருந்தும்:

புதிய வீடுகளுக்கான விண்ணப்பங்கள் விற்பனை நடைமுறை அக்டோபர் 2024 முதல் தொடங்கும்

- திருத்தியமைக்கப்பட்ட EHG ஆனது கடந்தகால விற்பனை நடைமுறைகளுக்கு (வரிசை எண்ணைப் பெற்றுள்ள, ஆனால் இன்னும் தங்கள் வீட்டை முன்பதிவு செய்யாமல் இருப்பவர்கள் உட்பட) பின்னோக்கிப் பயன்படுத்தப்படாது.

20 ஆகஸ்டு 2024 அன்று அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்ட மறுவிற்பனை விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்தல்

- அதாவது, விண்ணப்பத்தின் வாங்குபவர் மற்றும் விற்பவர் பகுதிகள் வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- திருத்தியமைக்கப்பட்ட EHG ஆனது, முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ள பரிவர்த்தனைகளுக்குத் தன்னியக்கமாக நீட்டிக்கப்படும்.

ஏற்கனவே HFE கடிதத்தைப் பெற்றுள்ள வாங்குநர்கள், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அதிக EHG-க்குத் தகுதிபெறும் வீடு வாங்குபவர்கள் மின்னஞ்சல் வழியாக ஒரு புதுப்பிக்கப்பட்ட HFE கடிதத்தைப் பெறுவார்கள்.




MND SINGAPORE
HOUSING & DEVELOPMENT BOARD

சொத்துச் சந்தை சுழற்சிகளில் நகர்கிறது.
சந்தை மந்தமாக இருக்கும்போது அதிகக் கடன் பெற்று அதிக விலைகளில் வீடு வாங்குபவர்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதால், வீடு வாங்குபவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு, பார்வையிடவும்:

go.gov.sg/mndndr24